**30.04.2026**

**CC 75/2018**

**PW.1. Sivaprakasam S/o. Venkatachalam**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன் மற்றும் பைனான்ஸ் செய்து வருகிறேன். நான் முறையாக பதிவு செய்து பைனான்ஸ் கொடுத்துவருகிறேனா என்றால் இல்லை. தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுத்துவருவதால் பதிவு செய்யவில்லை.

2. எனக்கு விவசாயத்தின் மூலம் ஒரு வருடத்திற்கு 3ல் இருந்து 4 லட்சம் வரை வருமானம் வருகிறது. எனக்கு சொந்தமாக 7 ஏக்கர் நிலம் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், தெரிந்துதான் தாக்கல் செய்துள்ளேன்.

3. என்னிடம் ஜோதி என்பவர் எந்த தேதியில் பணம் வாங்கினார் என்றால், 08.08.2017 அன்று வாங்கினார். என்னிடம் பணம் வாங்கிய தேதியன்று எதிரி காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை, 2 மாதங்கள் கழித்து 10வது மாத்தில் கொடுத்தார்.

4. எதிரிக்கு கொடுத்த தொகை பெரிய தொகை என்பதால் காசோலை பணம் கொடுத்த அன்றுதான் வாங்கியிருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. காசோலையை 10.10.2017 அன்று வங்கியில் செலுத்தினேன்.

5. காசோலை வங்கியில் இருந்து திருப்பபட்ட பின்னர் எதிரிக்கு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 30.10.2017 அன்று அனுப்பினேன். எதிரி ICICI NABARD Bank காசோலை கொடுத்தார் என்றால் சரிதான். காசோலை எண்.002103 ஆகும்.

6. நான் வழக்கறிஞர் அனுப்பியபோது எதிரி என்னிடம் பணம் கொடுத்துவிட்டார் என்றாலும், நான் பணம் பெற்றுகொண்டு எதிரி மீது வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு பணம் கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் பணத்தை திரும்ப செலுத்த கால அவகாசம் கேட்டதாக என்னுடைய புகார்மனுவில் சொல்லியுள்ளதால் எதிரி எந்த தேதியில் வந்து என்னிடம் கால அவகாசம் கேட்டார் என்றால் 30.10.2017 அன்று மதியம் 2 மணியவில் கேட்டார்.

7. நான் காசோலையை வங்கியில் எந்த தேதியில் மீண்டும் வசூலுக்காக செலுத்தினேன் என்றால், 01.11.2017 அன்று செலுத்தினேன். காசோலை மீண்டும் திருப்பபட்ட பின்னர் நான் எதிரிக்கு எத்தனை நாட்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், 03.11.2017 அன்று அனுப்பினேன். பின்னர் 28.11.2017 அன்று

நான் அனுப்பிய அறிவிப்பு எனக்கு திரும்ப வந்தது.

8. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது விசாரணையில் இருந்து நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்பது தெரியவருவதாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு எ்நத பணமும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.